**மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதித்துறை நடுவர் எண்.1**

**நீதிமன்றம், கொடைக்கானல், திண்டுக்கல் மாவட்டம்.**

**முன்னிலை : திரு. R. அருண்பாண்டியன், B.A.,B.L.,(Hons), M.L.,**
**மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல்**
**நீதித்துறை நடுவர் எண்.1,**
**கொடைக்கானல், திண்டுக்கல் மாவட்டம்.**

**2026 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 13 ஆம் நாள் வெள்ளிக்கிழமை**

**<u>இடைக்கால மனு எண். 2/2025</u>**
**in**
**<u>அசல் வழக்கு எண். 131/2011</u>**

சகாயம் ... மனுதாரர்

/ எதிர்/

1. P.B. சுரேஷ் பால்ராஜ்
2. கரோலின் ... எதிர்மனுதாரர்கள்

இந்த இடைக்கால மனு என் முன் கடந்த 11.02.2026 தேதி இறுதி விசாரணைக்கு வந்த போது மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு.ரவிச்சந்திரன் அவர்கள் ஆஜராகியும், எதிர்மனுதாரர்கள் தரப்பில் வழக்கறிஞர் திரு.I.ஜாம்ஜெகன் அவர்கள் ஆஜராகினார். இரு தரப்பு வழக்குரை மற்றும் சாட்சிய சான்றாவணங்களை பரிசீலனை செய்து இதுநாள் வரை என்னுடைய பரிசீலனையின் கீழ் இருந்து வந்த வந்து இன்று இந்நீதிமன்றம் வழங்கும்,

**<u>உத்தரவு</u>**

1. இடைக்கால மனு எண்.2/2025 ஆனது அசல் வழக்கு எண். 131/2011–ல் மனுதாரர் தரப்பில் / பிரதிவாதி தரப்பில் எதிர்மனுதாரரை குறுக்கு விசாரணை செய்யும் வாய்ப்பானது முடிக்கப்பட்டதை மீண்டும் எடுக்கவும், எதிர்மனுதாரரை மீண்டும் இந்நீதிமன்றத்திற்கு அழைக்கவும் அனுமதி கோரி சி.பி.சி 151ன் கீழ் மனுதாரரால் இந்த மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

## 2. மனுதாரர்கள் தாக்கல் செய்துள்ள மனுவின் சுருக்கம்:-

2.1, அசல் வழக்கான 131/2011-ல் மனுதாரர் / பிரதிவாதி தரப்பில் எதிர்மனுதாரர் சாட்சியை குறுக்கு விசாரணை செய்ய வாய்தாவானது ஒத்திவைக்கப்பட்ட நிலையில் அன்றைய தினம் தனது தரப்பு மூத்த வழக்கறிஞர் சென்னை உயர்நீதிமன்ற மதுரைகிளையில் உள்ள நீதிமண்ற அறை 14-ல் இருந்ததாகவும், அதனால் அன்றைய தினம் இந்நீதிமன்றத்தில் தோன்றவில்லை என்றும், எனவே மேற்படி தேதியில் எதிர்மனுதாரரை குறுக்கு விசாரணை செய்யாது வேண்டுமென்றே ஏற்பட்டது அல்ல என்றும், தவிர்க்க முடியாத சூழ்நிலையால் ஏற்பட்டது என்றும், மேலும், எதிர்மனுதாரர் தனது தரப்பில் குறுக்கு விசாரணை செய்வது தனக்கு மிகுந்த முக்கியத்துவம் வாய்ந்தது என்றும், மேலும், இம்மனுவை அனுமதிக்கும் பட்சத்தில் எதிர்மனுதாரருக்கு எவ்வித பாதிப்பு ஏற்படாது என்றும், இம்மனு அனுமதிக்க தவறும் பட்சத்தில் தனக்கு ஈடு செய்ய முடியாத இழப்பு ஏற்படும் என்றும், எனவே இம்மனுவை அனுமதிக்க கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

## 3. எதிர்மனுதாரர்கள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள எதிருரையின் சுருக்கம்.

3.1 அசல் வழக்கில் கடந்த 06.11.2025-ம் தேதியன்று PW1 நீதிமன்றத்தில் தோன்றினார் என்றும் மனுதாரர் தரப்பிலும் அவரது வழக்கறிஞர்களில் ஜீனியர் வழக்கறிஞர் இந்நீதிமன்றத்தில் ஆஜரானர் என்றும் ஆனால் அவர் PW1 குறுக்கு விசாரணை செய்யவில்லை என்றும், எனவே அன்றைய தினம் மனுதாரர் எதிர்மனுதாரர் குறுக்கு விசாரணை செய்யும் வாய்ப்பினை இந்நீதிமன்றம் முடித்ததாகவும், பின்னர் எதிர்மனுதாரர் தரப்பில் மேலும் சாட்சிகளை விசாரிக்க வழக்கானது ஒத்திவைக்கப்பட்டதாகவும், எதிர்மனுதாரர் தரப்பில் 2-வது சாட்சியை விசாரிக்க தயார் நிலையில் உள்ள போது மனுதாரர் வழக்கை காலம் கடத்துவதற்காக இம்மனுவையும், இது போன்ற பல மனுக்களையும் தாக்கல் செய்துள்ளதாகவும், எனவே இம்மனு அனுமதித்தால் மனுதாரர் அசல் வழக்கினை காலம் கடத்துவார் என்றும் அதனால்

தனக்கு பாதிப்பு ஏற்படும் என்றும் எனவே இம்மனுவை தள்ளுபடி செய்யவேண்டும் என்று கோரியுள்ளார்.

4. இவ்வழக்கில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனை யாதெனில் மனுதாரர்கள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள இம்மனுஅனுமதிக்கத்தக்கதா? இல்லையா? என்பதே ஆகும்.

**5. தீர்வு:–**

5.1 வழக்காவணங்களும் நன்கு பரிசீலனை செய்யப்பட்டது. அசல் வழக்கானது மனுதாரர் மீதும் அவரது வகையாட்கள் மீதும் நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரியும் தாக்கல் செய்யப்பட்டுள்து.

5.2. இந்த இடைக்கால மனுவானது அசல் வழக்கில் கடந்த 06.11.2025–ம் தேதியன்று மனுதாரர் எதிர்மனுதாரரையை குறுக்கு விசாரணை செய்யும் வாய்பினை முடிக்கப்பட்டதை மீண்டும் திறக்க (Reopen) க்காகவும், அவரை மீண்டும் இந்நீதிமன்றத்திற்கு அழைக்கவும் அனுமதிகோரி தாக்கல் செய்யப்பட்டுள்ளது

5.3 மனுதாரர்கள் தரப்பு வழக்கறிஞர் தனது மனுவில் கடந்த 06.11.2025–ம் தேதியன்று மனுதாரர் தரப்பு வழக்கறிஞர் இந்நீதிமன்றத்தில் தோன்றி எதிர்மனுதாரரை குறுக்கு விசாரணை செய்யாதது வேண்டுமென்றே ஏற்பட்டது அல்ல என்றும், அன்றைய தினம் மனுதாரர் தரப்பு வழக்கறிஞர் சென்னை உயர்நீதிமன்றம் மதுரை கிளையில் இருந்தார் என்றும், எனவே தான் அவரே குறுக்கு விசாரணை செய்யவில்லை என்றும் குறிப்பிட்டுள்ளார். மேலும், எதிர்மனுதாரர் தனது எதிரூரையில் மனுதாரர் அவரது ஜூனியர் வழக்கறிஞர் இருந்தார் என்றும், அவருக்கு எதிர்மனுதாரரை குறுக்கு விசாரணை செய்ய வாய்பானது அளிக்கப்பட்ட பின்னர் தான் எதிர்மனுதாரர் குறுக்கு விசாரணை முடிக்கப்பட்டதாக குறிப்பிட்டுள்ளார்.

5.4. இந்நிலையில் அசல் வழக்கானது மனுதாரர் மீது நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்பதும், மேற்படி அசல் வழக்கில் மனுதாரருக்கு கடந்த 11.06.2025, 08.07.2025, 23.07.2025 ஆகிய தேதிகளில் சாட்சி தோன்றிருந்தும் மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய உரிய வாய்பானது அளிக்கப்பட்டு, பிறகு எந்தவொரு குறுக்கு விசாரணையும் செய்யாமல் இந்த 14 வருட பழைய வழக்கை காலம் தாழ்த்தியதன் காரணமாக தான் மனுதாரர் எதிர்மனுதாரரை குறுக்கு விசாரணை செய்யும் வாய்ப்பானது முடிக்கப்பட்டுள்ளது என்பதனை அறிய முடிகிறது. இந்நிலையில், அசல் வழக்கினை நீதியின் முறையில் தீர்வு காண்பதற்கு இரு தரப்பினர்களை விசாரணை செய்தால் தான் வழக்கின் பயனாது உரிய தரப்பினர்களை சென்றடையும் என்பதால் மனுதாரருக்கு அசல் வழக்கில் சாட்சியம் அளிக்க வாய்ப்பானது அளிக்கலாம் என்று இந்நீதிமன்றம் கருதுகிறது. இருப்பினும் எதிர்மனுதாரர்கள் தரப்பில் குறிப்பிட்டுள்ளது போல் அசல் வழக்கில் இம்மனுவின் எதிர்மனுதாரரை குறுக்கு விசாரணை செய்ய வாய்ப்பு வழங்கப்பட்ட போதும் அவர் எதிர்மனுதாரரை குறுக்கு விசாரணை செய்யாமல் அசல் வழக்கினை தாமதம்படுத்தி வந்ததாகவும், மேலும் தனது தரப்பில் அடுத்த சாட்சி தயார் நிலையில் உள்ளதாகவும் கூறியுள்ளதை கருத்தில் கொண்டும், வழக்கானது சுமார் 14 வருடங்களுக்க மேலாக நிலுவையில் உள்ளதால் அசல் வழக்கினை விரைந்து முடிக்கும் பொருட்டு இம்மனுவை நிபந்தனையின் பேரில் அனுமதிக்கலாம் என்று இந்நீதிமன்றம் கருதுகிறது.

**முடிவாக, இந்த மனு கீழ்கண்ட நிபந்தனைகளின் பேரில் அனுமதித்து உத்திரவிடப்படுகிறது.**

**(1) மனுதாரர் எதிர்மனுதாரருக்கு ரூ.2500/–த்தை 3.03.2026ம் தேதிக்குள் செலுத்த வேண்டும் என்று உத்தரவிடப்படுகிறது.**

**(2) மேலும் அன்றைய தினம் எதிர்மனுதாரர் இந்நீதிமன்றத்தில் தோன்றினால் அவரை அன்றையதினமே குறுக்கு விசாரணை செய்யவேண்டும் என்று உத்திரவிடப்படுகிறது.**

**(3) மேற்கண்ட இரண்டு நிபந்தனைகளையும் மனுதாரர் பின்பற்ற தவறும்பட்சத்தில் இம்மனு தானாக தள்ளுபடியாகிவிடும் என்றும் உத்தரவிடப்படுகிறது.**

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் அலுவலக கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைத்திருத்தம் செய்யப்பட்டு பின்னர் இன்று 13.02.2026 நான் என்னால் திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

R ARUN PANDIAN Digitally signed by R ARUN PANDIAN Date: 2026.02.13 18:06:16 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதித்துறை நடுவர் எண்.1.

கொடைக்கானல்.

1. மனுதாரர் சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்:– இல்லை
2. எதிர்மனுதாரர் சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்:– இல்லை
3. நீதிமன்ற சான்றவாணங்கள்:– இல்லை

R ARUN PANDIAN Digitally signed by R ARUN PANDIAN Date: 2026.02.13 18:06:22 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதித்துறை நடுவர் எண்.1.

கொடைக்கானல்.